3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(i) தமிழக அரசு தலைமைச் செயலகத்தின்முன் உண்ணாவிரதம் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் திரு சித்தன் அவர்கள் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, " தமிழ் நாட்டுச் சட்டப்பேரவை விதி 42-ன் கீழ், கீழ்காணும் அவசரமும் பொதுமுக்கியத்துவமும் " வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்க வேண்டுகிறேன்:—

" இன்று காலை தமிழக அரசின் தலைமைச் செயலகத்தின்முன் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக ஒரு நாள் அடையாள உண்ணாவிரதமிருந்த திரு. எஸ். அண்ணாமலை உள்பட 9 விவசாயிகள் கைது செய்யப்பட்டது பற்றி விவாதிக்க ' என்று கொடுத்திருக்கிறார்கள். உண்ணாவிரதமிருப்பது, கைது செய்வது பற்றி ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுப்பது முறையாகாது என்று விதிமுறைகள் கூறுகின்றன. ஏற்கெனவே, 1961-ல்

' Hunger strik e by Harijan students of M. C. Raja Students' Hostel—Disallowed on the ground that hunger strike could not form the subject-matter of an adjournment motion, and the Member, who gave notice of the adjournment motion, was advised to put a short notice question if he wanted ".

என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். எனவே, நான் இதற்கு அனுமதியளிக்க மறுக்கிறேன்."

(ii) சென்னை அரசினர் கலைக்கல்லூரியில் தமிழ் போதனா முறையினால் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள அமைதியின்மை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்தபடியாக டாக்டர் ஹாண்டே அவர்கள் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை அவர்கள் படிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : Sir, I have given notice of the following motion :—

" That the business of the House stand adjourned to discuss a matter of urgent public importance, namely, the serious unrest among the students in the Tamil Medium Class in the Government Arts College, Madras as a result of the fear that Tamil medium would hamper their progress at some stage. Conversion of the Tamil medium classes into English medium wherever the students want it appears to be the only way to solve this problem. "

I request you, Sir, to adjourn the business of this House to discuss how best this can be brought about.